# செய்தி மடல்

(சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வெளியீடு)

திருவள்ளுவர் ஆண்டு 2042 (தை–மாசி) பிப்ரவரி 2012 ஏர்-27, உழவு-02, விலை ரூ.10.00

ஆசிரியர், வெளியிடுபவர் :
பரணி கே.பாலசுப்பிரமணி
“வெள்ளி விழா இல்லம்”
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28351244 / 28352744
செல் : 9381545452

## கொங்கு நண்பர்கள் சங்கம்

“தீரன் சின்னமலை மாளிகை”
72, பீட்டர்ஸ் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
Ph : 28351744
Cell : 93821 55581

“கொங்கு நாடு இல்லம்”
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014
Ph : 28350432 /
Fax : 044-28351244

தலைவர் : பரணி கே.பாலசுப்பிரமணி
துணைத்தலைவர்கள் : கே.ஏ.கணபதி
பி.சென்னியப்பன்
செயலாளர் : ஆர். செல்வராஜ்
இணைச்செயலாளர்கள்: எஸ்.ஆர்.இராஜேந்திரன்
Dr.கே.ஆர்.பி.சண்முகம்
பொருளாளர் : கே.கே. ரமேஷ்
தணிக்கையாளர் : ஆர். பாலச்சந்திரன்

செயற்குழு உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| கே.ராஜாமணி | பி.அருள் |
| வி.பி.செங்கோட்டுவேல் | எம்.எஸ்.சங்மேஸ்வரன் |
| பி.கே.ஈஸ்வரமூர்த்தி | வீ.ஆர்.பாலசுப்பிரமணியன் |
| ஆர். சண்முகவேல் | எம்.அமராபதி |
| எம். கார்த்திக் | எஸ்.அன்பழகன் |
| வி.பி.வீரப்பன் | சி.சர்வராஜன் |
| ஆர்.இளங்கோ | எம்.எஸ்.ராஜேந்திரன் |
| பி.ரவி | கே.என்.தர்மராஜ் |
| Dr.டி.எஸ்.செல்வராஜ் | Dr.மணிமேகலை புஷ்பராஜ் |
| எஸ்.சிவசாமி | உத்தமிபொன்னுசாமி |

## இந்த இதழில்

| | |
|---|---|
| பொருளடக்கம் | - 1 |
| தலையங்கம் | - 2 |
| தானே புயல் | - 3 |
| நிவாரண நிதி | - 4 |
| வாழ்த்துகிறோம் | - 5 |
| வேண்டுகோள் | – 6 |
| அடையாள அட்டை விண்ணப்பம் | – 7 |
| கட்டிட நிதி | - 8 |
| என்றும் நலமுடன் வாழ | - 9 |
| நூல் வெளியீட்டு விழா | - 11 |
| நெல்லுச் சோறு | - 12 |
| வாழ்த்துகிறோம் | - 13 |
| நூல் வெளியீட்டு விழா | - 14 |
| வாழ்த்துகிறோம் | - 15 |
| வருந்துகிறோம் | - 17 |
| வாழ்த்துகிறோம் | - 18 |
| கவிதை | - 19 |
| திருவிளையாடல்கள் | - 20 |
| 50 வது ஆண்டு வளர்ச்சி | - 22 |
| அதிசயங்கள் | - 24 |
| மணமகள் தேவை | - 25 |
| மணமகன் தேவை | - 27 |
| மணமகள் தேவை | - 29 |

### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / செய்தி மடல் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# தலையங்கம்

அன்பு சொந்தங்களுக்கு, வணக்கம்.



தானே புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண மற்றும் மறுவாழ்வு முயற்சிகளுக்கு உதவி புரியும் வகையில் தாராளமாக நன்கொடை வழங்க வேண்டும் என்று பொதுமக்களையும், தொழிலதிபர்களையும், அரசு சாரா அமைப்புகளையும், தரும சிந்தனையுள்ளவர்களையும் தமிழக முதல்வர் அவர்கள் வேண்டுகோள் விடுத்துக் கேட்டுள்ளதை அனைவரும் அறிந்திருப்பீர்கள்.

இயற்கை அன்னையின் கோபத்தாண்டவம் 'தானே' புயல் வடிவில் வெளிப்பட்டது. தமிழகத்தில் கடலூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. மின் கம்பங்கள் சாய்ந்து, மின்சார வசதி முற்றிலுமாகத் துண்டிக்கப்பட்டு, மக்களின் இயல்பு வாழ்க்கை மிகப் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியது. உண்ண உணவும், குடிக்க தண்ணீரும், குளிருக்கு ஆடையும், குழந்தைகளுக்குப் பாலும் கிடைக்காமல் மக்கள் பட்ட சிரமங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. மரங்கள் எல்லாம் சாய்ந்துவிட்டன. விவசாயிகளின் நிலைமை மிகவும் பரிதாபகரமானதாக உள்ளது.

தானே புயல் ஆடிய ருத்ர தாண்டவம் கடலூர் மாவட்டத்தைத் சூறையாடிவிட்டுச் சென்றுவிட்டது என்றால் அது மிகையல்ல. இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மனிதர்கள், தற்போது இயற்கையை வஞ்சித்து வாழ்கிறார்கள். காடுகளை அழிக்கிறார்கள். விவசாயத்திற்கு முன்னுரிமை தராதது மட்டுமல்ல, விவசாயத் தொழிலையே நஷ்டத் தொழிலாக மாற்றிவிட்டார்கள். அல்லும் பகலும் அயராது உழைக்கும் விவசாயிகள் படும்பாடு சொல்லி மாளாது. அதுவும் இது போன்ற இயற்கைச் சீற்றங்களால் மிகவும் அதிகமாக பாதிக்கப்பட்டது விவசாயிகள்தான்.

சுமார் 60 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் தானியங்கள் நாசமாகிவிட்டன. 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஹெக்டேர் நிலங்களில் முந்திரித் தோப்புகள் சுவடே தெரியாமல் சிதைந்து போய்விட்டன. ஆயிரமாயிரம் ஹெக்டேர் நிலங்களில் வாழைகளும், பலா மரங்களும் முற்றிலுமாக சேதப்படுத்தப்பட்டுள்ளன.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் இது போன்ற சமயங்களில் அரசின் நிவாரண நிதிக்கு உதவி வந்துள்ளது. எனவே நமது சங்கத்தின் சார்பில் நிதி வசூலித்து அதை முதல்வர் நிவாரண நிதிக்கு வழங்க வேண்டும் என நமது சங்கம் முடிவெடுத்துள்ளது. பிறருக்கு உதவுவதில் எப்போதும் முன்னணியில் இருக்கும் நமது சங்க உறுப்பினர்களும், கொங்கு சமுதாய மக்களும், தானே புயலால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவுகின்ற வகையில் நன்கொடை அனுப்புமாறு சங்கத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

மனிதநேயம் கொண்ட அன்புமிக்க சொந்தங்களே!

நமது ஆதரவுக் கரத்தை நீட்டுவோம். அவதியுறும் மக்கள் வாழ்வில் ஒளியேற்ற கை கொடுபோம்.

'காலத்தினாற் செய்த உதவி சிறிதெனினும்

ஞாலத்தின் மானப் பெரிது'

என்றார் வான்புகழ் வள்ளுவர். காலத்தே உதவி செய்வோம். கடமையென நினைத்து முடிந்ததைச் செய்வோம்.

நன்றி! வணக்கம்!

பரணி கே. பாலசுப்பிரமணி
தலைவர்

❖❖❖❖❖

## 'தானே' புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிக் கரம் நீட்டுவோம்



நீங்கள் அனுப்பும் காசோலை அல்லது வரைவோலையில்

Kongu Nanbargal Sangam

(கொங்கு நண்பர்கள் சங்கம்)

என்று குறிப்பிட்டு, தொகையை எழுதி அத்துடன் இந்தக் கூப்பனையும் நிரப்பி அனுப்பவும் :

பெயர் : .................................................................

முகவரி : .................................................................

.................................................................

காசோலை / வரைவோலை எண். : ..........................................தேதி : ............................

தொகை : .................................................................

தொடர்பு எண். : .................................................................

குறிப்பு : ❖ நன்கொடை வழங்குபவர்களுக்கு 80G சான்றிதழ் வழங்கப்படும்.

❖ வரைவோலை சென்னையில் மாற்றத்தக்க வகையில் இருக்கவேண்டும்.

**அனுப்ப வேண்டிய முகவரி :–**

தானே புயல் நிவாரண நிதி

## கொங்கு நண்பர்கள் சங்கம்


'வெள்ளி விழா இல்லம்' எண்.34, சீனிவாச பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை – 600 014. போன் : 044-2835 1244 / 2744

# கொங்கு நண்பர்கள் சங்கம்

தானே புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண நிதி அளித்தவர்கள்

| வ. எண். | பெயர் | ஊர் | தொகை |
|---|---|---|---|
| 1 | திரு. பரணி கே.பாலசுப்பிரமணி<br>தலைவர்<br>சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் | சென்னை | 25,000 |
| 2 | திரு. தீரன் சின்னமலை & திரு. கபிலன்<br>S/o. சின்னசாமி Ex MP | கரூர் | 25,000 |
| 3 | திரு. கே.கே.ரமேஷ்<br>பொருளாளர்<br>சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் | சென்னை | 25,000 |
| 4 | திரு. கே.ஏ.கணபதி<br>துணைத் தலைவர்<br>சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் | சென்னை | 25,000 |
| 5 | திரு. பி.சென்னியப்பன்<br>துணைத் தலைவர்<br>சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் | சோமனூர் | 25,000 |
| 6 | திரு. ஈ.ஆர்.ஈஸ்வரன்<br>முன்னாள் துணைத் தலைவர்<br>சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் | சென்னை | 25,000 |
| 7 | திரு. கே.பாலசுப்பிரமணியன்<br>முன்னாள் தலைவர்<br>சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் | சென்னை | 25,000 |
| 8 | திரு. அட்லஸ் நாச்சிமுத்து<br>தலைவர்<br>கொங்கு கல்வி அறக்கட்டளை, கரூர் | கரூர் | 25,000 |
| 9 | டாக்டர் என்.எம்.வீரய்யன்<br>வேந்தர்<br>சவிதா பல்கலைக்கழகம் | சென்னை | 25,000 |
| 10 | திரு. எஸ்.சிவசாமி<br>செயற்குழு உறுப்பினர்<br>சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் | கோயமுத்தூர் | 25,000 |
| 11 | திரு. ஆர்.சண்முகவேல்<br>செயற்குழு உறுப்பினர்<br>சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் | சென்னை | 25,000 |
| 12 | திரு. பாலகுருசாமி<br>செயலாளர்<br>கரூர் கொங்கு நண்பர்கள் சங்கம் | கரூர் | 10,000 |
| | | **மொத்தம்** | **2,85,000** |

## வாழ்த்துகிறோம்



2012 ஆம் ஆண்டு குடியரசு தினத்தையொட்டி, இந்திய அரசு டாக்டர் வி.எஸ்.நடராஜன் அவர்களுக்கு பத்மஸ்ரீ விருது அளித்து கௌரவித்துள்ளது.

முதியோர் மருத்துவ நிபுணரான திரு. நடராஜன் அவர்கள் மருத்துவத்துறையில் சிறந்து விளங்கி சாதனை படைத்துள்ளமைக்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

M.D., FRCP (Edin) D.Sc., (Hons) ஆகிய பட்டங்கள் பெற்றுள்ள டாக்டர் வி.எஸ்.நடராஜன் முதியோர் மருத்துவத்தின் தந்தை என்று போற்றப்படுகிறார். 1978 ஆம் ஆண்டு சென்னை அரசு மருத்துவமனையில் முதன் முதலாக முதியோர்கள் மருத்துவத்திற்காகத் தனித்துறையைத் தொடங்கிய பெருமை பெற்றவர். 1996 ஆம் ஆண்டு சென்னை மருத்துவக் கல்லூரியில் இதற்கான M.D. படிப்பைத் தொடங்க முக்கியக் காரணமாயிருந்தவர் இவர்.

50க்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை தேசிய மற்றும் பன்னாட்டுக் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு படைத்துப் பாராட்டுப் பெற்றவர் இவர். இவருடைய 'முதுமையிலும் இன்பம்' என்ற நூல் முதியோருக்கான சிறந்த மருத்துவ நூலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழக முதல்வர் மாண்புமிகு ஜெ.ஜெயலலிதா அவர்களிடம் விருது பெற்றுள்ள சிறப்புக்குரியவர் இவர்.

டாக்டர் பி.சி.ராய் தேசிய விருது, Indian Merchants Chamber Platinum Jubliee Trust Award, Satpaulr mittal National Award, எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் கௌரவ டாக்டர் பட்டம், நான்கு முறை வாழ்நாள் சாதனையாளர் விருது முதலானவற்றைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி மருத்துவமனையில் இலவசமாக மருத்துவ சேவை வழங்கிவரும் இவர் ஒரு சிறந்த ஆன்மீகவாதியும் கூட. மூத்த குடிமக்கள் மன்றத் தலைவராகப் பொறுப்பேற்று மூத்த குடிமக்களின் மருத்துவச் சேவையில் பெரும் பங்காற்றி வருகிறார்.

சிறந்த முதியோர் மருத்துவர், மனித நேய மாண்பாளர், ஆன்மீகவாதி எனப்பன்முகம் கொண்டுள்ள இவர் எளிமை, உழைப்பு, இன்முகம், சேவை போன்ற அரும்பண்புகளுக்குச் சொந்தக்காரர்.

ஆங்கிலம் மற்றும் தமிழில் 25 நூல்களுக்கு மேல் எழுதியுள்ளவரும், நமது செய்தி மடலில் தொடர்ந்து பயனுள்ள பல மருத்துவக் கட்டுரைகள் எழுதி வருபவரும், தன்னுடைய சாதனைகளுக்காக நமது சங்கத்தின் கொங்கு மாமணி விருது பெற்றவருமான டாக்டர் வி.எஸ்.நடராஜன் அவர்களுக்கு பத்மஸ்ரீ விருது பெற்றதற்காக சங்கம் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

❖❖❖❖❖

## உறுப்பினர்களுக்கு அன்பான வேண்டுகோள்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் புதியதாக அடையாள அட்டை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று ஏற்கனவே செய்தி மடல் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளது. செய்தி மடலில் வெளியிடப்பட்டுள்ள அடையாள அட்டை மாதிரி விண்ணபத்தில் தேவையான தகவல்களைப் பூர்த்தி செய்து, இதுவரை சங்கத்திற்கு அனுப்பாதவர்கள், உடனே அனுப்பும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சங்கத்தின் தேர்தல்களில் வாக்களிப்பதற்கும், சங்கம் அளித்து வரும் சலுகைகளைப் பெறுவதற்கும் புதியதாக வழங்கப்படவுள்ள அடையாள அட்டை அவசியம் தேவைப்படும். எனவே இதுவரை விண்ணபத்தை அனுப்பாத உறுப்பினர்கள் உடனே அனுப்பும்படி வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

'தீரன் சின்னமலை மாளிகை' கட்டிட நிதிக்கு இதுவரை ரூ. 1000/– அனுப்பாத சங்க உறுப்பினர்கள், உடனே அனுப்பிட அன்புடன் வேண்டுகிறோம். ரூ.1000/– அனுப்பாத சங்க உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்குவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும் என்பதால், கட்டிட நிதியை உடனே சங்கத்திற்கு அனுப்பிடுமாறு வலியுறுத்திக்கேட்டுகொள்கிறோம்.

❖❖❖❖❖

## சங்கச் செய்தி

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் இணையதள முகவரி மாற்றப்பட்டுள்ளது.

www.kongunanbargalsangam.com

உறுப்பினர்கள் இனிமேல் புதிய இணையதளத்தைப் பயன்படுத்தி சங்கச் செய்திகளை அறிந்துகொள்ள வேண்டுமென அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பரணி **கே. பாலசுப்பிரமணி**
தலைவர்

**ஆர். செல்வராஜ்**
செயலாளர்

❖❖❖❖❖

அடையாள அட்டை விண்ணப்பம்

# கொங்கு நண்பர்கள் சங்கம்

**வெள்ளி விழா இல்லம்**

நெ.34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.

Membership No. / உறுப்பினர் எண் :

Name / பெயர் :

Father's Name / தகப்பனார் பெயர் :

Date of Birth / பிறந்த தேதி :

Edu. Qualification / கல்வித்தகுதி :

Occupation / தொழில் :

Koottam & Kula Deivam
கூட்டம் & குல தெய்வம் :

Photo

| Native Address<br>சொந்த ஊர் முகவரி | Present Address<br>தற்போதைய முகவரி | Office Address<br>அலுவலக முகவரி |
|---|---|---|
| Ph : | Ph : | Ph : |

Cell Number: E-mail ID :

Family Details / குடும்ப விவரம்

| Name<br>உறுப்பினர் பெயர் | Date of Birth<br>பிறந்த தேதி | Relationship<br>உறவுமுறை | Education / Employment<br>படிப்பு / தொழில் | Blood Group<br>இரத்தப் பிரிவு | Land Line / Mobile<br>தொலைபேசி/கைபேசி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

குறிப்பு : தங்களைப் பற்றி மேலும் விபரங்களைத் தெரிவிக்க
விரும்பினால் அவற்றை இத்துடன் இணைத்து அனுப்பவும்.

Signature
கையொப்பம்

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டிட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | 70,34,335 |
| 1498 | 1655 | S.தங்கவேல் | 5,000 |
| 1499 | 304 | Dr.P. ராசப்பன் | 5,000 |
| 1500 | 809 | K. ராமசாமி | 3,000 |
| 1501 | 765 | R. விஜயகுமார் | 1,001 |
| 1502 | | T.D. சிந்து | 1,000 |
| 1503 | 1410 | K. ரங்கநாதன் | 1,000 |
| 1504 | 0862 | K. சுப்ரமணியம் | 1,000 |
| 1505 | 825 | K. ராமசாமி | 1,000 |
| 1506 | 1790 | M.P. முருகேசன் | 1,000 |
| 1507 | 015 | P. மணி | 1,000 |
| 1508 | 3297 | N. ராமசாமி | 1,000 |
| 1509 | 143 | E. ராதாகிருஷ்ணன் | 1,000 |
| 1510 | 567 | C. துரைசாமி | 1,000 |
| 1511 | 2765 | R. சுந்தரவடிவேல் | 1,000 |
| 1512 | 1692 | A. கண்ணன் | 1,000 |
| 1513 | | R. நடராஜன் | 1,000 |
| 1514 | 2555 | A. சிதம்பரம் | 1,000 |
| 1515 | 1512 | M. சுந்தரமூர்த்தி | 1,000 |
| 1516 | | C. முனுசாமி | 1,000 |
| 1517 | | K. ரவிகுமார் | 1,000 |
| 1518 | 1013 | P. ராமசாமி | 1,000 |
| 1519 | | S. ரஞ்ஜனா | 1,000 |
| | | மொத்தம் | 70,66,336.00 |

# என்றும் நலமுடன் வாழ

## முதியோர்களைப் புறக்கணிப்பது ஏன்?

கொங்குமாமணி Dr.வி.எஸ்.நடராசன்

முதியோர் மருத்துவர்

மனிதனின் வாழும் நாட்கள் அதிகரிக்கின்றன. அதனால் முதியோர்களின் எண்ணிக்கையும் அதிகமாகிறது. ஒரு வீட்டில் குறைந்தது ஒன்று அல்லது இரண்டு பேர் 70 வயதிற்கு மேற்பட்டவர்கள் வசிப்பது காலத்தின் கட்டாயமாகிவிட்டது. இதனால் குடும்பத்தில் பல பிரச்சனைகள் வெடிக்க ஆரம்பித்துவிட்டன. கூட்டுக்குடும்பங்கள் அழியத் தொடங்கிவிட்டன. தனிக்குடித்தனங்களும், முதியோர் இல்லங்களும், புற்றீசல்கள் போல் கிளம்ப ஆரம்பித்துவிட்டன.

இதன் விளைவு ? முதியோர்களும் சரி, இளைஞர்களும் சரி, மகிழ்ச்சியோ நிம்மதியோ இல்லாமல் வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

முன்பெல்லாம் முதியோர்கள் கடவுளுக்குச் சமமாகக் கருதப்பட்டு, மதிக்கப்பட்டு வந்தார்கள். அந்த மரியாதை கொஞ்சம் சொஞ்சமாகக் குறைந்து, அவர்களை மனிதர்களாகவாவது இளைஞர்கள் சற்று மதித்தார்கள். தற்பொழுது அதுவும் குறைந்து, முதியவர்களை ஒரு பாரமாக எண்ணுகிறது இளைய சமுதாயம். இது எதனால் ? சமுதாயச் சூழ்நிலையில் மாபெரும் மாற்றம். பொருளாதார வளர்ச்சி, அதனால் ஏற்படும் ஒரு நெருக்கடி. அவசர வாழ்க்கை முறை. தான், தன் மனைவி மற்றும் குழந்தைகளின் மகிழ்ச்சிக்கு(?) அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. முதியவர்களின் மகிழ்ச்சிக்கு முக்கியத்துவம் குறைகிறது. முதியவர்கள் தனிமைப்படுத்தப்படுகிறார்கள். அவர்களை ஒரு பாரமாக எண்ணி இளைஞர்கள் தங்களின் மகிழ்ச்சிக்குத் தடையாக இருப்பதாகவும் கருதுகிறார்கள். அவர்களைப் பராமரிப்பது வீண் செலவு என்று எண்ணுகிறார்கள். இளைஞர்கள் முதியவர்களைப் புறக்கணிக்கத் தொடங்குகிறார்கள்.

**முதுமையில், யார், யார் புறக்கணிக்கப்படுகிறார்கள் ?**

எந்த விதமான வருமானமோ சொத்தோ இல்லாமல் இளைஞர்களைச் சார்ந்து வசிப்பவர்கள்.

ஒரே குழந்தையைப் பெற்ற முதியவர்களும் சில சமயங்களில் புறக்கணிக்கப்படுகிறார்கள்.

நாள்பட்ட நோய் உள்ள முதியவர்கள். உதாரணம்: மறதி நோய், பக்கவாதம், உதறுவாதம், மனநோய்கள்.

படுத்த படுக்கையில் கிடக்கும் முதியவர்கள். தங்களுடைய எல்லாத் தேவைகளுக்கும் வீட்டில் இருப்பவர்களின் உதவியை நாடும்பொழுது முதியவர்கள் மீது வெறுப்பும் கோபமும் ஏற்படுகிறது.

**தீர்வு எப்படிக் காண்பது ?**

இளைஞர்களின் எண்ணப்போக்கு மாற வேண்டும். தாங்களும் ஒருநாள் முதியவர்கள்ஆவோம் என்பதை எண்ணிப் பார்த்தாலே, செய்யும் தவறு புரிந்துவிடும். இளைஞர்கள் அவர்களாகவே அதை உணராதபட்சத்தில், சமூகம் அதை உணரவைக்க வேண்டும். பள்ளிகள், கல்லூரிகளில் முதியவர்களின் பெருமைகளைப் பற்றியும், அவர்களின் தேவைகளைப் பற்றியும் பாடமாகச் சொல்லித்தர வேண்டும்.

தொலைக்காட்சி, வானொலி மற்றும் பத்திரிகைகள் போன்ற ஊடகங்களில் முதியோர்களின் சிறப்பை உணர்த்தும் வகையில் நிகழ்ச்சிகள் ஒலி/ ஒளிபரப்பப்பட வேண்டும். முதியவர்களை மதித்து நடக்கும் இளைஞர்களைப் பாராட்டி விழா எடுத்து பரிசுகளை வழங்கலாம். இது மற்ற இளைஞர்கள் மனதிலும் மாற்றத்தை விளைவிக்கலாம். முதியோருக்கு இழைக்கப்படும் கொடுமைக்கு எதிரான முழக்கங்களைப் பலரும் அறியச் செய்ய வேண்டும்.

**முழக்கங்கள்**

இயலாமையைப் பொறுத்தல் ஓர் உயர்ந்த குணம்.
ஓசையின்றி முதியோருக்கு இழைக்கும் கொடுமை, தண்டனைக்குரிய தீவிரவாதம்.
முதியோருக்கு எதிரான கொடுமை, ஒரு தீயச் செயல்.
முதுமையின் இயலாமை இயற்கையின் நியதி; முதியோருக்குக் கொடுமை செய்வோர் இயற்கையின் எதிரி.

**உலக முதியோர் கொடுமை ஒழிப்பு விழிப்புணர்ச்சி**

ஐக்கிய நாடுகள் சபை ஒவ்வோர் ஆண்டும் ஜீன் 15–ம் தேதியை ''முதியோருக்கு எதிரான கொடுமைகள் ஒழிய விழிப்புணர்ச்சி ஊட்டும் நாளாக'' அனுசரித்து வருகிறது. அன்று எல்லா இளைஞர்களும், குடும்பத்தினரும் கீழ்க்கண்ட உறுதிமொழியை எடுத்துக்கொள்ள வேண்டும்.

**உறுதிமொழி**

''முதியோருக்கு எதிராக இழைக்கப்படும் அனைத்துவகை கொடுமைகளையும், அவை வாய்மொழியாகவோ. வன்முறை மூலமாகவோ, பொருளாதார ரீதியாகவோ, எந்த உருவில் வந்தாலும் அவற்றைக் களைவதற்காகவும், முளையிலேயே கண்டுபிடித்துத் தலையிட்டுத் தடுக்கவும், அறவே நீக்கவும், என் சொந்த முயற்சியாலும், தேவைப்பட்டால் அரசு மற்றும் தொண்டு நிறுவனங்களின் துணையோடும் பாடுபடுவேன்.

அவர்களுடைய எல்லா வகையான தேவைகளுக்கும், உடல் வளத்துக்கும், பாதுகாப்புக்கும், அன்புக்கும், மனவளத்துக்கும், மதிப்புக்கும், மரியாதைக்கும், அங்கீகாரத்துக்கும் இடையூறு ஏற்பட்டால் அவற்றைத் தடுத்துப் பாதுகாப்பேன் என்றும் உறுதி கூறுகிறேன்.''

தொடரும்...

❖❖❖❖❖

## சிலப்பதிகாரச் சிந்தனைகள் நூல் வெளியீட்டு விழா



தமிழ் கூறும் நல்லுலகில் 60 ஆண்டுக்காலமாக மிக அதிக எண்ணிக்கையில் செந்தமிழ் இலக்கிய மேடைகளில் சொற்பொழிவாற்றியவர்; 1200 க்கும் மேற்பட்ட நூல்களுக்கு அணிந்துரைகளை வழங்கியவர்; மிக அதிக எண்ணிக்கையில் இலக்கியத் தலைப்புகளில் தொடர் சொற்பொழிவாற்றியவர் என மூன்று மிகப்பெரிய முத்தான சாதனைகளை, யாரும் எளிதில் முறியடிக்க இயலாத ஒப்பற்ற சாதனைகளை, நிகழ்த்தியுள்ள மூத்த தமிழறிஞர் கொங்குமாமணி சிலம்பொலி செல்லப்பனார் அவர்கள் எழுதிய 'சிலப்பதிகாரச் சிந்தனைகள்' என்ற நூல் வெளியீட்டு விழா 19–12–2011 அன்று சென்னை இராயப்பேட்டை ஸ்வாகத் ஹோட்டல் அரங்கில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

'அருணோதயம்' பதிப்பகம் வெளியீடாக வந்துள்ள இந்த நூலை முன்னாள் அமைச்சர் இராம. வீரப்பன் அவர்கள் வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார். முதற் பிரதியை திரு.நல்லிகுப்புசாமி செட்டியார் அவர்கள் பெற்றுக்கொண்டார். சென்னை தொலைக்காட்சி நிலைய முன்னாள் இயக்குநர் திரு. ஏ.நடராஜன், எழுத்தாளர் திரு.பட்டுக்கோட்டை பிரபாகர், கோவை விஜயா பதிப்பக உரிமையாளர் திரு.வேலாயுதம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தமிழ்ப்பேரறிஞர் இரா.பி.சேதுப்பிள்ளை அவர்களால் சிலம்பொலி என்று பட்டம் வழங்கப்பட்ட பெருமைக்குரியவரும், சிலப்பதிகாரத்தைப் பட்டி தொட்டிகள் முதல் பன்னாட்டு அரங்குகள் வரை பரப்பியவருமான சிலம்பொலியார் அவர்கள் எழுதியுள்ள இந்த அற்புதமான இலக்கிய நூல் வெளியீட்டு விழாவில் சங்கத்தின் தலைவர் திரு.பரணி கே.பாலசுப்பிரமணி, துணைத்தலைவர் திரு. பி.சென்னியப்பன் செயலாளர் திரு. ஆர்.செல்வராஜ், பொருளாளர் திரு.கே.கே.ரமேஷ், இணைச்செயலாளர் திரு.எஸ்.ஆர்.இராஜேந்திரன், செயற்குழு உறுப்பினர்கள் திரு.சங்கமேஸ்வரன், திரு.இராஜாமணி ஆகியோர் கலந்துகொண்டதுடன், சிலம்பொலியாருக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.

❖❖❖❖❖

# நெல்லுச் சோறு

அறுபது வயசு கிட்டான் ஊரை ஒட்டியுள்ள அவரது ஓர் ஏக்கர் தோட்டத்திலேயே குடிசை போட்டு அவரது பொஞ்சாதி பொன்னம்மாளுடன் வசித்து வருகிறார். ஒரே பையன் எங்கோ வெளியூரில் சொற்ப சம்பளத்தில் ஒரு மில்லில் வேலை செய்கிறான்.

காலையில் ஆக்கிய மிச்சமிருந்த சோற்றுடன் இரவுச் சாப்பாடு முடிந்தது. குடிசையின் பக்கத்திலேயே கட்டியிருந்த மாடுகள் இரண்டுக்கும் சோளத்தட்டு ஒரு கற்றையை துண்டு துண்டாய் நறுக்கிப் போட்டுவிட்டு, வாயில் ஒரு புகையிலையை அடக்கிக் கொண்டு கயிற்றுக் கட்டிலில் சாய்ந்தார். உள்ளே இருந்து பொன்னம்மாள் சத்தம் போட்டாள். மறக்காமல் நாளைக்குப் போய் ரேசன் அரிசி வாங்கிட்டு வாங்க என்று.

கட்டிலில் சாய்ந்தவருக்கு அவருடைய இளமைக் கால எண்ணங்கள் தோன்ற அவற்றைச் சிறிது நேரம் அசை போட்டார். ஐம்பது வருஷத்திற்கு முன்னால் கரூரிலிருந்து கோயம்புத்தூர் வரை 80 மைல் (130km) தூரத்துக்கு ஒரே காடு தான். வருஷத்தில் ஒரு மூனு மாசம் கொஞ்சம் பச்சை கண்ணுக்குத் தெரியும். மீதி ஒம்பது மாசமும் ரோட்டின் இரண்டு பக்கமும் குரங்காடுதான்.

கொங்ச வருஷங்கழிச்சு ஆழியாறு, பரம்பிக்குளம் திட்டம் வந்தது. உடுமலை, பொள்ளாச்சி, பல்லடம், காங்கயம் செழிப்பாச்சு. பவானி வாய்க்கால் வந்தது. ஈரோட்டிற்குத் தென் பகுதி செழிப்பாச்சு.

இந்த இரண்டுக்கும் நடுவே பேருக்குத்தான் நொய்யல் ஆறு. ஆனால் நிலங்கள் அத்தனையும் வானம் பார்த்த பூமிதான். காய்ஞ்சு போன காடுகள். வருணபகவான் கருணை வச்சால் ராகி, கம்பு, சோளம், மிளகாய், பருத்தி என்று கொஞ்சம் புன்செய் பயிர் செய்யலாம். இல்லாவிட்டால் தோட்டங்கூட மாடு மேய்க்கும் காடுதான்.

நெல்சாகுபடி என்பது கானல் நீர். பகல் கனவுதான். ராகி, கம்பு, சோளம்தான் வருஷம் பூராவும் வீட்டில் சோறு. அத்தி பூத்தாற் போல ஏதாவது நோம்பி, நல்ல நாள் வந்தால்தான் நெல்லுச் சோறு. அதுவும் கடையில் ஆனை விலைக்கு வாங்கிய மட்டமான அரிசிச் சோறு. கிட்டத்தட்ட ஊரில் எல்லார் வீட்டிலும் இதே கதைதான். கிட்டான் ஊர் மாதிரி பல கிராமங்களிலும் இதே வறட்சி தான்.

இப்படி வாய்க்கால் வராதா, நாமும் வயலடிப்போமா, தினமும் நெல்லுச் சோறு தின்போமா என்று ஏங்கிக் கிடந்தவர்களுக்கு இன்ப அதிர்ச்சியாக அரசாங்கம் ஒரு அறிவிப்பு வெளியிட்டது. நொய்யலாற்றின் குறுக்கே அணை கட்டுவது என்று. எல்லோருக்கும் ஏகப்பட்ட சந்தோசம். மாரியம்மனுக்குப் பொங்கல்கூட வைத்தார்கள் சந்தோசத்தில். அணை கட்டப்பட்டது. ஊரெல்லாம் வாய்க்கால் அமைக்கப்பட்டது. ஒரு நல்ல நாளில் அமைச்சரும் திறந்துவைத்தார். இதுவரை வாய்க்கால் வழியாகத் தண்ணீர் பாயாத வறட்டு நிலங்களில் எல்லாம் தண்ணீர் ஓடிப் பாய்ந்தது.

மக்கள் நாற்று விட்டு நெல் நட்டார்கள். களை எடுத்தார்கள். வட்டிக்குக் கடன் வாங்கி யூரியா, உரம் அனைத்தும் போட்டார்கள். மாசம் மூனாச்சு. பயிர் அத்தனையும் வாடி, காஞ்சி, மடிஞ்சும் போச்சு. விவசாய நிலம் அத்தனையும் பாழாச்சு. உழைத்த உழைப்பும் வீணாச்சு. வட்டிக்கு வாங்கிக் கொட்டிய பணமும் போச்சு. விபரம் தெரிந்தவர்கள் சொன்னார்கள், "திருப்பூர் சாயக்கழிவு நீர் அணை நீருடன் கலந்து அத்தனை நிலத்தையும் பாழாக்கியது, பூமித் தாயை மலடாக்கியது" என்று.

இன்று கிணறு நிறைய தண்ணீர், ஆனால் அத்தனையும் உப்பு நீர்.
முன்பாவது புன் செய் பயிர்கள் கொஞ்சம் விளைந்தன. இப்ப அதுவும் போச்சு. நெல்லுக்கு ஆசைப்பட்டு உள்ளதும் போச்சு.

ரேசன் கடையில் இலவச அரிசி வாங்கி நெல்லுச் சோறு தின்னுவிட்டு, கிட்டானும் அவர் பொஞ்சாதியும் 100 நாள் வேலைக்குப் போகிறார்கள். இரவோடு இரவாக இன்னும்கூட கழிவுநீரை ஆற்றில் விடுவதாகக் கேள்விப் படுகிறோம். என்றுதான் தணியுமோ இந்த ஏழைகளின் துயரம்.

ந. பாலகிருஷ்ணன், உறுப்பினர் எண். 2655, கைபேசி – 94454 00500

❖❖❖❖❖

## வாழ்த்துகிறோம்



கொங்கு சமுதாயத்தை சார்ந்த திரு.து.பிரபு அவர்கள் தேசிய அளவில் சமூக நல பல்மருத்துவ கழகத்தின், 2011-2015 க்கான துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் சென்னையில் உள்ள SRM பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

ஈரோடு மாவட்டம், புஞ்சை புளியம்பட்டி காவிலிபாளையம் திரு. துரைசாமி - திருமதி. பாலசரஸ்வதி தம்பதியரின் மகனான இவர், செல்லன் கூட்டத்தைச் சார்ந்தவர். இவரது மனைவி திருமதி பவித்ரா. இவர்களுக்கு ஆதவன் துரைபிரபு என்ற மகன் உள்ளார்.

தேர்வு பயிற்சி கையேடு - சமூக நலப்பல்மருத்துவம் என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டுள்ளார். இந்திய பல் மருத்துவ ஆராய்ச்சி மாத இதழில் ஆராய்ச்சி கட்டுரைகளும், இந்திய மற்றும் உலக அளவில் முன்னணி ஆராய்ச்சி நூல்களில் இவரது 65க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகளும் வெளிவந்துள்ளன.

அகில இந்திய சமூக பல் மருத்துவக் கழகத்தின் துணைத்தலைவராக பெங்களூரில் நடந்த தேசிய மாநாட்டில் நடந்த தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். திரு. து.பிரபு அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

❖❖❖❖❖

# மறதி நோய் - சுகமா? சுமையா?
# நூல் வெளியிட்டு விழா



சிறந்த முதியோர் மருத்துவர், எழுத்தாளர், சமூக சேவையாளர், மூத்த குடிமக்கள் மன்றத்தின் புரவலர், ஆன்மீகவாதி போன்ற பன்முகங்களைக் கொண்டுள்ளவர் டாக்டர் வி.எஸ்.நடராஜன் அவர்கள். முதியோர் மருத்துவத்தில் லண்டனில் சிறப்புப் பயிற்சியும் பட்டமும் பெற்றவர். சென்னை அரசு பொது மருத்துவ மனையில் முதியோருக்கான தனி சிகிச்சைப் பிரிவையும், சென்னை மருத்துவக் கல்லூரியில் முதியோர் மருத்துவத்துக்காக பட்ட மேற்படிப்பையும் முதன்முதலாகத் தொடங்கியவர். முதியோர் மருத்துவத்தில் 50–க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிகளைச் செய்துள்ளவர். இந்தியா மற்றும் வெளிநாடுகளில் வெளிவரும் மருத்துவ நூல்களில் பல கட்டுரைகளை எழுதியுள்ளவர்.

முதியோர் மன நலன் பேண, சென்னையில் நினைவாற்றல் மையம் ஒன்றையும், முதியோருக்கு அவசரகால சிகிச்சை வழங்க மூத்த குடிமக்கள் மன்றம் ஒன்றையும் முதன் முதலாகத் தொடங்கி நடத்தி வருபவர்.

தமிழ், ஆங்கிலம் என இரு மொழிகளிலும் பயனுள்ள பல நுல்களை எழுதியுள்ள இவரது 25–வது நூலாக 'மறதி நோய் – சுகமா ? சுமையா ?' என்ற நூல் வெளிவந்துள்ளது. இதன் வெளியீட்டு விழா 24.12.2011 அன்று சென்னை ஹோட்டல் ரமடா ராஜ்பார்க் அரங்கத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனார் நூலை வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார். திரைப்பட நடிகரும், சிறந்த சொற்பொழிவாளரும், ஓவியருமான கம்பன் காதலன் திரு.சிவகுமார் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டு வாழ்த்துரை வழங்கினார். தென்காசி திருவள்ளுவர் கழகத் தலைவர் முனைவர் ச. கணபதிராமன் நூல் மதிப்புரை நிகழ்த்தினார்.

மூத்த குடிமக்கள் மன்றம் சார்பாக நடைபெற்ற இந்த இனிய விழாவில் மன்றத் தலைவர் டாக்டர், கேப்டன் சிங்கராஜா வரவேற்புரையாற்ற, பொருளாளர் திரு. வி. இராஜகோபால் நன்றியுரை கூறினார். விழா நிகழ்ச்சிகளை முனைவர் மணிமேகலை புஷ்பராஜ் தொகுத்து வழங்கினார்.

டாக்டர் வி.எஸ்.நடராஜன் அவர்கள் தனது ஏற்புரையில் மறதி நோயைப் பற்றி பல பயனுள்ள தகவல்களைக் கூறியதோடு, அதைத் தடுக்கும் முறைகளைப் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார்.

விழாவில் தமிழக காவல்துறை முன்னாள் கூடுதல் இயக்குநர் திரு. வி.சி.பெருமாள் IPS, சென்னை கொங்கு நண்பர்கள் சங்க முன்னாள் தலைவர் திரு. கோவிந்தசாமி, கொங்கு நாடு அறக்கட்டளை செயளாளர் திரு. டி.கே. சுப்பிரமணியன், இந்திரா இண்டஸ்ட்ரீஸ் நிர்வாக இயக்குநர் திரு. கே.பொன்னுசாமி, பல்லடம் திரு. வடிவேல், திருமதி நடராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர். மூத்த குடிமக்கள் மன்ற உறுப்பினர்கள் திரளாக வந்து விழாவினைச் சிறப்பித்தனர்.

❖❖❖❖❖

## வாழ்த்துகிறோம்



கோவை பிரபல ஜெம் மருத்துவமனை செரிமான நலத்துறை மற்றும் லேப்பிராஸ்கோப் சிகிச்சை வல்லுநர் டாக்டர் பழனிவேலுக்கு, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தில் 25–11–2011 அன்று நடைபெற்ற விழாவில் தமிழக ஆளுநர் திரு.ரோசய்யா சிறந்த மருத்துவர் விருது வழங்கினார். சிறப்பு மருத்துவ வளர்ச்சி மற்றும் சாதனைகளைப் பாராட்டி இவ்விருது வழங்கப்பட்டது.

வயிற்று அறுவை சிகிச்சையில் குறிப்பாக லேப்பிராஸ்கோப் சர்ஜரியில் உலக அளவில் பல அரிய சாதனைகள் செய்து புகழ் பெற்றவர். இந்தியாவில் லேப்பிராஸ்கோப் சிகிச்சை வளர்ச்சி அடைய செய்த அவரது சாதனையைப் பாராட்டி டாக்டர்.பி.சி.ராய் தேசிய விருது மற்றும் பாரத ஜனாதிபதி பதக்கமும் பெற்றவர். உணவுக்குழாய், இரைப்பை, மலக்குடல், கணையப்புற்று நோய் நவீன சிகிச்சை பற்றிய இவருடைய சிகிச்சை முறைகள் ஜப்பான், கொரியா, சீனா, இங்கிலாந்து, அமெரிக்கா உள்பட பல நாடுகளில் பாடமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோடு, அந்நாடுகள் விருதுகள் வழங்கி பாராட்டி உள்ளன. அந்நாடுகளில் அறுவை சிகிச்சை செய்யும் உரிமை மற்றும் கௌரவப் பேராசிரியர் அந்தஸ்து பெற்றவர்.

இவர் எழுதிய புத்தகங்கள் வளர்ந்த நாடுகளிலும் பாடமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. ஸ்பானிஸ், கொரியா, சீனா, ஜப்பான் போன்ற பல மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. புற்றுநோய், ஹெர்னியா, உடல்பருமன் குறைப்பு சிகிச்சை முதலானவற்றில் ஜெம் மருத்துவமனை சிறந்து விளங்குகிறது.

சிறந்த மருத்துவர் விருதைப் பெற்றுள்ள கொங்குமாமணி டாக்டர் சி.பழனிவேலு அவர்களை சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பாராட்டி பெருமை கொள்கிறது.

❖❖❖❖❖

## வாழ்த்துகிறோம்



கோவை ரூட்ஸ் குழுமத்தின் மனிதவள மேம்பாட்டுத் துறையின் இயக்குநர் சிந்தனைக்கவிஞர் டாக்டர் கவிதாசன் அவர்களுக்கு ஆந்திர மாநிலம் ஐதராபாத் திருவள்ளுவர் தமிழ்ச்சங்கம் ‘வாழ்வியல் சிந்தனை ஒளி’ என்ற விருதினை வழங்கி சிறப்பித்துள்ளது. டாக்டர் கவிதாசன் அவர்கள் மனிதவள மேம்பாட்டுத்துறையில் ஆற்றியுள்ள சாதனைகளைப் பாராட்டும் விதத்திலும், இளைஞர் சமுதாயத்தின் மேம்பாட்டிற்காக அவர் புரிந்துவரும் தன்னலமற்ற சேவையினைப் பாராட்டும் விதத்திலும் இந்த விருது வழங்கப்பட்டது.

17.12.2011 அன்று ஹரிஹர கலாபவன், செகந்தராபாதில் நடைபெற்ற திருவள்ளுவர் தமிழ்ச்சங்கம் 4ம் ஆண்டு விழாவில் கவிமாமணி இலந்தை சு.ராமசாமி அவர்கள் இந்த விருதினை டாக்டர் கவிதாசன் அவர்களுக்கு வழங்கினார்கள்.

‘வாழ்வியல் சிந்தனை ஒளி’ விருது பெற்றுள்ள டாக்டர் கவிதாசன் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

❖❖❖❖❖

# வாழ்த்துகிறோம்



நமது சங்கத்தின் முன்னாள் தலைவரும், நிறுவனர்களுள் ஒருவருமான மூத்த வழக்கறிஞர் கொங்குமாமணி திரு.இரா.காந்தி அவர்களின் பேரன், 17 வயது பள்ளி மாணவரான செல்வன் அர்ஜுன் காந்தி. இவர் தன்னுடைய மனிதாபிமான செயலால், பெங்களூரில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் நலனுக்கான ரூ.6 இலட்சத்தை பலரிடம் நன்கொடையாகப் பெற்று (Karnataka Spastic Society) கர்நாடக மனவளர்ச்சி குன்றியோர் நல அமைப்பிற்கு வழங்கி, அனைவரின் போற்றுதலைப் பெற்றுள்ளார்.

10ம் வகுப்பு முடித்து 11ம் வகுப்பிற்குச் செல்லும் இடைப்பட்ட நாட்களில் பெங்களூரில் உள்ள மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் நலக்காப்பகத்திற்குப் பணி செய்யச் சென்ற அர்ஜுன் காந்தி, அங்கே பல குழந்தைகள் பொருளாதார நிலை காரணமாக அறுவை சிகிச்சை செய்ய முடியாமல் தவித்தது கண்டு, மனம் வெதும்பி, தனது தந்தை திரு. ரவீந்திரன் காந்தி, பிலிப்ஸ் கம்பெனியின் மூத்த அதிகாரி மற்றும் தாத்தா திரு. காந்தி ஆகியோரிடம் சொல்லி பலரிடமும் உதவி பெற்று அந்த ஆதரவற்ற குழந்தைகளுக்கு ரூ.6 இலட்சத்திற்கும் அதிகமாகச் சேர்த்து, அந்த நிறுவனத்தின் இயக்குநரிடம் 18-12-2011 அன்று ஒரு விழாவிலே வழங்கி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார்.

அந்த நிறுவனத்தின் இயக்குநர் காசோலையைப் பெற்றுக்கொண்டு இளைஞன் அர்ஜுன் காந்தியை மிக வெகுவாகப் பாராட்டினார். "அர்ஜுனின் இச்செயலால் இங்குள்ள பல மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்து அவர்களுக்குப் புனர் வாழ்வு அளிக்க முடியும். ஒரு பள்ளி மாணவனால் இவ்வளவு பெரிய தொகையை வசூலித்துக் கொடுக்க முடியும் என்று நாங்கள் கனவிலும் எண்ணவில்லை. இச்சிறுவனின் நற்செயலால் அவன் குடும்பத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் நல்ல பெயரைச் சம்பாதித்துத் தந்திருக்கிறான்'' என்று அங்கு குழுமியிருந்த நூற்றுக்கணக்கானவர் மத்தியில் மனம் நெகிழ்ந்து பாராட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் கொங்கு மாமணி திரு.இரா.காந்தி அவர்களுடைய மகள் திருமதி பிரீத்தா காந்தி அருண்பிரசாத் மிகச் சிறப்பான பரதநாட்டியத்தை ஆடி அனைவரின் பாராட்டையும் பெற்றார்.

இக்கால இளைஞர்கள், குறிப்பாக கொங்கு சமுதாய இளைஞர்கள் பின்பற்ற வேண்டிய அற்புதமான, செயற்கரிய செயலைச் செய்து முடித்து சாதனை புரிந்துள்ள செல்வன் அர்ஜுன் காந்திக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழகத்திற்கும், கொங்கு சமுதாயத்திற்கும் பெருமை சேர்க்கின்ற உன்னதமான அறப்பணியை, தக்கார்க்கு உதவுகின்ற மனிதநேயச் செயலைச் சிறப்பாகச் செய்துள்ள அர்ஜுன் காந்தி வாழ்வில் எல்லா நலன்களும் பெற்று மேலும் பல சாதனைகளைச் செய்திட சங்கம் வாழ்த்துகின்றது.

❖❖❖❖❖

# வருந்துகிறோம்



ஈரோடு தாலுக்கா, மொடக்குறிச்சி கிராமம், காட்டுப்பாளையம், பாலக்காட்டு வலவு கே.பி.இராமலிங்க கவுண்டர் பி.ஏ., அவர்கள் மனைவி திருமதி ஆர். தனபாக்கியம் தனது 85 வது வயதில் 6-1-2012 வெள்ளிக்கிழமை இரவு சொந்த ஊரில் இறைவனடி சேர்ந்தார்கள். இவரது கணவர் 1987 ம் வருடம் 73வது வயதில் இறைவனடி சேர்ந்தார்கள்.

திருமதி தனபாக்கியம் அவர்கள் மிகுந்த தெய்வபக்தியும், உறவினர்கள் மீது பாசமும், கிராம மக்கள் மீது அன்பும் கொண்டிருந்தவர். மூலிகை வைத்தியம் அறிந்தவர். நலம் தரும் கீரைகள் நூறு என்ற மூலிகை நூலை எழுதியுள்ளார். வேலூர் பொற்கோவில் ஸ்ரீ நாராயணளி அருள்மிகு சக்தி அம்மாவின் ஆசியைப் பெற்றவர். பூத உடலுக்கு ஸ்ரீசக்தி அம்மா அனுப்பிய தீர்த்தம், மலர்மாலையுடன் பீட டிரஸ்டி திரு. சௌந்தரராஜன் சம்பத் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது. ஊர்மக்கள், பெரியவர்கள், உறவினர்கள், நண்பர்கள், குழாம் சூழ உடல் காட்டுப்பாளையத்தில் 7-1-2012 மாலை எரியூட்டப்பட்டது. நடிகர் திரு.சிவக்குமார் முன்னாள் அமைச்சர்கள், திரு.என்.கே.கே.பெரியசாமி, திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன், திரு.என்.கே.கே.பி.ராஜா, திரு. பி.சி.ராமசாமி, திரு.துரை ராமசாமி, திரு.சாமிநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.கே.பரமசிவக்கவுண்டர், திருச்செங்கோடு திரு.டி.எம்.காளியண்ண கவுண்டர், திரு.கந்தசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.பாலகிருஷ்ணன், திரு.ஆர்.எம்.பழனிசாமி, திரு.விடியல்சேகர், திரு.ராஜ்குமார் மன்றாடியார், பாராளுமன்ற உறுப்பினர் திரு.கனேசமூர்த்தி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் திரு.கிட்டுசாமி எம்.எல்.ஏ., தொழில் அதிபர்கள், பன்னாரி அம்மன் குழுமத் தலைவர் திரு. எஸ்.வி. பாலசுப்பிரமணியம், திரு.எஸ்.பி.ஆறுமுகம், எஸ்.கே.எம்.குழுமத்தலைவர் திரு.எஸ்.கே.மயிலானந்தம், சக்தி மசாலா திரு.பி.சி.துரைசாமி, கோவை ரூட்ஸ் நிறுவனர் திரு.ராமசாமி மற்றும் கொங்கு நண்பர்கள் சங்கத் தலைவர்கள், மூத்த வழக்கறிஞர்கள் திரு.வி.கே.முத்துசாமி, திரு.இரா.காந்தி, முன்னாள் நீதிபதி திரு. மாசிலாமணி, திரு.ஈ.ஆர்.ஈஸ்வரன், திரு.பெஸ்ட் எஸ்.ராமசாமி, திரு.கே.சி.காளியண்ணன், திரு.கே.பாலசுப்பிரமணியன், திரு.செங்கோட்டுவேலு உட்பட திரளானோர் அஞ்சலி செலுத்தினார்கள்.

தெய்வத்திரு. இராமலிங்கம்-தனபாக்கியம் தம்பதியர்க்கு Dr.கே.ஆர்.பாலசுப்பிரமணியம், Lr. கே.ஆர்.சாயிநாதன், Ar. கே.ஆர்.ரமேஷ், கே.ஆர்.சிவக்குமார் ஐ.ஏ.எஸ்., Er. கே.ஆர்.சக்தி கணேசன் ஆகிய ஐந்து மகன்களும், சுகுணா பாலசுப்பிரமணியம், சந்திரலேகா சாயிநாதன், சித்ரா ரமேஷ், சாந்தி சிவக்குமார், மகேஸ்வரி சக்தி கணேசன் என்ற ஐந்து மருமகள்களும் உள்ளனர். மூன்று பேத்திகளும், ஆறு பேரன்களும், மூன்று கொள்ளுப்பேத்திகளும், இரண்டு கொள்ளுப் பேரன்களும் உள்ளனர்.

நிறைவான வாழ்க்கை வாழ்வாங்கு வாழ்ந்து இறைவனடி சேர்ந்துவிட்ட திருமதி தனபாக்கியம் அவர்களின் குடும்பத்தாருக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறது.

❖❖❖❖❖

## வாழ்த்துகிறோம்



8–1–2012 அன்று சென்னையில் தென்னிந்திய புத்தக வெளியீட்டாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கம் சார்பில் நடந்த விழாவில் நமது சங்கத்தின் உறுப்பினரும், கொங்கு சாதனையாளர் விருது பெற்றவருமான பேராசிரியர் டாக்டர் வி.முருகன் அவர்களுக்கு 2011 ஆம் ஆண்டிற்கான சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது வழங்கப்பட்டது.

சங்க இலக்கிய நூல்கள், ஐம்பெரும் காப்பியங்கள், திருக்குறள் முதலானவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து சாதனை படைத்தவர். புகழ்பெற்ற ஆக்ஸ்போர்டு நிறுவனம் இவர் தயாரித்த ஆங்கிலம் – தமிழ் அகராதியை வெளியிட்டுள்ளது. பல கவிதை நூல்களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்ததோடு, தமிழக அரசின் விருதுகளையும் பரிசுகளையும் பெற்ற பெருமைக்குரியவர். சென்னைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் விரிவான ஆங்கிலம்–தமிழ் அகராதி தயாரிக்கும் பணியைச் சிறப்பாகச் செய்தவர் இவர்.

சிறந்த மொழி பெயர்ப்பாளர் விருது பெற்றுள்ள டாக்டர் வி.முருகன் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, மேலும் பல சாதனைகள் புரிய வாழ்த்துகிறது.

❖❖❖❖❖

## வீரமங்கையை வாழ்த்துகிறோம்

சென்ற மாதம் சென்னை எழிலகப் கட்டடத்தில் ஏற்பட்ட தீ விபத்தினை அணைக்க மேற்கொண்ட முயற்சியில் மிகவும் துணிச்சலுடனும், வீரத்துடனும், திறமையாகவும் செயல்பட்டு கடமையாற்றிட்ட அசோக்நகர், கோட்ட தீயணைப்பு அலுவலர் திருமதி பிரியா ரவிச்சந்திரன் அவர்களுக்கு 26-1-2012 அன்று நடைபெற்ற குடியரசு தினவிழாவில் தமிழக முதல்வர் வீரதீர செயலுக்கான அண்ணா பதக்கத்தை வழங்கினார். பதக்கத்தை திருமதி பிரியா சார்பில் அவர் கணவர் திரு. ரவிச்சந்திரன் பெற்றுக்கொண்டார். உயிரைப்பணயம் வைத்து கடமையாற்றியபோது தீக்காயங்கள் ஏற்பட்டு அதற்காக சென்னை அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்ற திருமதி பிரியா ரவிச்சந்திரன் அவர்கள் விரைவில் முழு குணமடைய சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பிரார்த்திக்கிறது.

தன்னுடைய அரிய, வீரச்செயலால் அண்ணா பதக்கம் பெற்றுள்ளதோடு, கொங்கு சமுதாயத்திற்குப்பெருமை தேடித்தந்துள்ள திருமதி பிரியா ரவிச்சந்திரன் அவர்களுக்கு சங்கம் வாழ்த்துகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறது.

❖❖❖❖❖

**நமது முன்னோர்கள் காலத்தில் அரூர், பாப்பிரெட்டிப்பட்டி பகுதிகளில் நடந்த திருமணங்களில் பாடப்பட்ட மங்கல வாழ்த்தின் ஒரு பகுதி**

வாழையைப் பிளந்து வளவெல்லாம் பந்தலிட்டு
தென்னையைப் பிளந்து தெருவெல்லாம் பந்தலிட்டு
கோத்த முத்தை எடுத்துக் கட்டி

கோக்காத முத்தை மணலில் பரப்பி
கோடி புடவையைக் கொசுவி உடுத்தி
வண்ணப் புடவையை வலச்சிக்கட்டி
பட்டுப்புடவையை மடிச்சிக் கட்டி
உட்கார்ந்து மோர்கடைய முக்காலி சீதனங்கள்

பட்டி நிறைஞ்சிருக்க பசுமாட்டு சீதனங்கள்
ஏரி நிறைஞ்சிருக்க வெள்ளாட்டு சீதனங்கள்
குட்டை நிறைஞ்சிருக்க குறிஆடு சீதனங்கள்
மூன்னூறு மாட்டில் முதல்மாடு சீதனமாம்
கடைசியில் வருவது கண்ணுதாயி சீதனமாம்
பட்டி நிறைஞ்சிருக்க பால்பானை பொங்கிவரும்
கூட்டம் குறையாமல் கொண்டை பூ வாடாமல்
வட்டிலிலும் தொட்டிலிலும் வடியாத பால்கடல் !

(தமிழ்நாடு அரசு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.பி.பழனியப்பன் அவர்களின் தாயார் திருமதி பொன்னியம்மாள் அவர்கள் கூறிய பாடல்)

❖❖❖❖❖

# திருமணங்களில் திருவிளையாடல்கள்

திரு.செ.நல்லசாமி

சென்ற இதழ் தொடர்ச்சி...

விவசாய விளை பொருட்களை இடு பொருட்களாகவும், எச்சில் இலைகளை உற்பத்திப் பொருளாகவும் கொண்டுள்ள இந்தத் தொழிற் சாலைகள் நாடெங்கிலும் உள்ளன. இவை அந்நிய செலவாணியை ஈட்டித் தருமா ? அயல் நாடுகளில் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்துமா ?

'வீடியோ' பதிவுகளும், 'போட்டோ' படங்களும் பொதுவாக இன்று எல்லாத் திருமணங்களிலும் எடுக்கப்படுகின்றன. அலங்கார மின் விளக்குகளுக்கும், 'ஆர்க்கெஸ்ட்ரா' நிகழ்ச்சிகளுக்கும் ஆயிரக்கணக்கில் செலவு செய்கின்றனர். மலர்களால் மணமக்கள் பெயர்களைப் பெரிய அளவில் எழுதுவதற்கும், மணவறையை அலங்கரிப்பதற்கும், மணமக்களை அழகுபடுத்துவதற்கும் பல ஆயிரங்கள் கொட்டப்படுகின்றன. உலக அதிசயங்களில் ஒன்றான தொங்கு தோட்டமாக மண்டபத்தை மாற்றி அமைப்பதும் கூட உண்டு.

நடுத்தரக் குடும்பங்களும் கூட துணிமணிகளை வாங்குவதற்காக காஞ்சிபுரம், சென்னை போன்ற பெருநகரங்களுக்குச் சொந்த பந்தங்களைத் திரட்டிச் கொண்டு போவதுண்டு. முகூர்த்த நேரத்தில் மட்டுமே உடுத்தப்படுவதும், தண்ணீர் பக்கம் போகாததும், கூடுதலான எடை கொண்டதுமான கூறைப் புடவையைப் பல ஆயிரங்கள் கொடுத்து வாங்குவது அவசியம்தானா என்று பலபேர் சிந்திப்பது இல்லை.

உழவுத் தொழில் மட்டுமே செய்து வரும் கிராமப்புற மணமகனுக்கு விலை உயர்ந்த கோட், சூட், பூட்ஸ்,டை அணிவித்து சோளக் கொல்லைப் பதுமையாக அந்த ஒருநாள் நாடகத்தில் ஐரோப்பிய உடையில் நிற்க வைத்து வேடிக்கை பார்ப்பதையும் கூட இன்று பரவலாகப் பார்க்க முடிகிறது.

வந்திருக்கும் விருந்தாளிகளுக்கு நினைவுப் பரிசு கொடுப்பதற்காக ஒரு பெரும் தொகை அள்ளி வீசப்படுவதும் உண்டு. மணமக்களை வாழ்த்திப் பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக விளம்பரப் படுத்துவதற்கும், சுவரொட்டிகள் அச்சடித்து நகரத் தெருக்களில் ஒட்டுவதற்கும் சில ஆயிரங்கள் செலவிடப்படுகின்றன.

திருமணத்திற்கு அரசியல் கட்சித் தலைவர்கள் வரும்போது இது பல ஆயிரமாகக் கூடி விடுகிறது. மணமேடையை அரசியல் மேடையாக ஆக்கி விடுவது கூட உண்டு. இவர்களின் மேலான வருகையை முன்னிட்டு வண்ண வண்ண போஸ்டர்கள், வானவில்லை ஒத்த வளைவுகள், வானைத் தொடும் அளவுக்குக் கட்டவுட்டுகள் போன்ற சீர்களையும் செய்ய வேண்டியிருக்கும். மடாதிபதிகளையும் சாமியார்களையும் அழைத்து மணவிழாவின் போது மரியாதை செய்யபவர்களும் இருக்கிறார்கள்.

திருமணத்திற்கு வருபவர்கள் நெடுஞ்சாலை நெடுகிலும் வாகனங்களை நிறுத்துவதால் நெடுஞ்சாலைப் போக்குவரத்து நிலை குலைந்து போவதுண்டு. இதனால் நெடிய தூரம் செல்லும் நெடுஞ்சாலைப் பயணிகள் நீண்ட நேரம் சிறை வைக்கப்படுவதும் நடக்கும். இவ்வாறான செயல்களே தங்களது செல்வச் செழிப்பையும், சமுதாய அந்தஸ்தையும் காட்டிப் பெருமை சேர்க்கின்றன என்ற எண்ணம் பரவலாக உள்ளது. இதற்காக, கார் வைத்திருப்பவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அழைப்பவர்களும் உண்டு. பொது மக்கள் படும் துன்பத்தில் இன்பம் காணும் செயலாகவே இது இருக்கின்றது !

நடுத்தரமான கோயில் ஒன்றில் நாற்பது, ஐம்பது திருமணங்கள் ஒரே நேரத்தில் நடப்பதும் உண்டு. அதிகாலை வேளையில் ஆலய வளாகத்தில் முகூர்த்த நாளில் ஆங்காங்கே தனித்தனிக் கூட்டமாக வட்டமாக அமர்ந்திருக்கும் அந்தக் காட்சி அந்தக்கால வட்டமேஜை மாநாட்டை நினைவுபடுத்துவதாகவே இருக்கும். அப்போது அந்தக் கூட்டத்தில் மணமக்களைத் தேடிக் கண்டுபிடிப்பதும் கூட ஒரு சிரமமான காரியம்தான்.

அவ்வப்போது அதிக எண்ணிக்கையில் திருக்கோயில்களில் திருமணங்கள் நடத்தப்படுவதால், ஆலயத்தின் தூய்மையையும், புனிதத்தையும் காக்க முடிவது இல்லை. அமைதியைத் தேடி ஆலயங்களை நாடி வருவோர்களுக்கு இவ்வாறான நிகழ்வுகள் மன இறுக்கத்தை ஏற்படுத்தி விடுவதும் உண்டு.

பொதுவாக, திருமண விருந்து நான்கு வேளை போடப்படுகிறது. சமைத்துப் பரிமாறுவதற்கு ரூ. 50,000 என்றும், ரூ. 60,000 என்றும் பேசி, குத்தகைக்கு விடப்படுகிறது . விலையுயர்ந்த வெளிநாட்டுக்கார்களில் செல்போன் சகிதம் வரும் அளவுக்கு ஒப்பந்தக்காரர் முன்னேறி இருப்பதைப் பரவலாகக் காணலாம். இவர்களின் வீடுகளைக் குறிவைத்தே இன்று வருமான வரித்துறை வரி ஏய்ப்புச் சோதனை (Raid) நடத்துகிறது.

குத்தகைக்காரர் சமையலுக்குக் கூட்டி வரும் கூட்டத்தை உற்றுப் பார்த்தால் திருமண விருந்து உண்ணும் எண்ணம் ஒருவருக்கும் வராது. பொதுவாகப் பலதரப்பட்ட நோய்களுக்கு ஆளாகிப் போதைப் பொருட்களுக்கு அடிமையாகிப் போக்கிடம் இல்லாமல், பார்க்குகளிலும், பஸ் ஸ்டாண்ட்களிலும், கோயிற் படிக்கட்டுகளிலும் படுத்துக் கிடக்கும் பரிதாபத்திற்குரிய அநாதைகளே இந்த வேலைக்குப் பல நேரங்களில் அழைத்து வரப்படுகின்றனர். தொட்டதிற்கெல்லாம் ஜாதி, மதம் பார்க்கும் இந்தச் சமுதாயம் ஏனோ இதில் மட்டும் பார்ப்பதில்லை. இது நல்ல அம்சம் என்றே சொல்லலாம்.

உலகில் உள்ள நோய்களெல்லாம் உடலில் இருக்கும் இவர்களுக்குப் புதுப்பனியன்கள் கொடுக்கப்பட்டு 'பேட்ஜ்கள்' குத்தப்படுகின்றன. இவர்கள் அரிசியையும், பருப்பையும், காய்கறிகளையும், எண்ணெயையும், தண்ணீரையும் தொட்டுச் சமைத்துப் பரிமாறும் உணவை உண்டவர்களுக்கு நோய் தொற்றி உடல் நலம் குன்றியே தீரும். இதனால்தானோ என்னவோ தெரியவில்லை நகர வீதியில் தடுக்கி விழுந்தால், ஒரு மருத்துவமனை முன்போ அல்லது மருந்துக் கடை முன்போதான் விழ வேண்டும் என்று சொல்லும் அளவுக்கு நிலைமை இருக்கின்றது. இவ்வாறாக விருந்து என்ற பெயரில் வியாதி பரப்பப்படுகிறது.

விருந்தினரை அமர வைத்து இலை போட்டு, விரும்புவதை வேண்டும் அளவுக்குக் கேட்டு விருந்து படைப்பதே விருந்தோம்பல் பண்பாகும். நாய்களுக்கு மட்டுமே சட்டியில் சோறுபோட்டு, பின் நாயைக் கூப்பிட்டு விடுவது நமது நெடுநாளைய வழக்கம். ஏனென்றால், நாய்க்கு இது வேண்டும், அது வேண்டும் என்று கேட்கத் தெரியாது.

திருமண மண்டபங்களில் இலைகளைப் போட்டு எல்லாவற்றையும் பரிமாறிப் பின்பு இழுவைக் கதவைத் திறந்து விடுவது இன்றைய வழக்கமாக உள்ளது. காட்டாற்று வெள்ளமாக முண்டியடித்துக் கொண்டு நுழைந்து மிதிபடுவது கூட சில நேரங்களில் நடக்கும். இசைத்தட்டு நாற்காலி (MUSICAL CHAIR) விளையாட்டுக்கு இடம் பிடிப்பதற்கும் இதற்கும் பெரிய வேறுபாடு இருப்பததாகத் தெரிய வில்லை.

பெரும் செலவு செய்து படைக்கப்படும் உணவில் உண்ணும் அளவை விட உண்ணாமல் இலைகளில் ஒதுக்கப்படும் உணவே அதிகம். தனது வீட்டில் கறிவேப்பிலையைக் கூட விடாமல் உண்டு விட்டு, கையில் ஒட்டியுள்ளதையும், உண்ணும் கலத்தின் ஓரத்தில் எஞ்சியுள்ளதையும் கூட வீணாக்காதவர்கள், விருந்தில் மட்டும் வீணாக்குகிறார்கள். இதற்கு இரு காரணங்கள் சொல்லலாம். தான் விருந்துக்கு முதலீடு போடவில்லை என்பது ஒன்று, அடிப்பதற்குப் பக்கத்தில் அம்மாவோ, இடிப்பதற்கு மனைவியோ அருகில் இல்லை என்ற தைரியம் மற்றொன்று.

தொடரும்....

❖❖❖❖❖

# கொங்கு நண்பர்கள் சங்கம், சென்னை 50வது ஆண்டு வளர்ச்சியின் ஒரு பார்வை

பேராசிரியர் முனைவர் களி மேடு கா.இலட்சுமணன்

முன்னாள் செயலாளர்

இப்புத்தாண்டில் கொங்கு சொந்தங்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். 1961 பிற்பகுதியில் கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தோற்றம் பற்றி தேன்தமிழில் முனைவர் திருமதி மணிமேகலை புஷ்பராஜ் அழகாக வடித்துக் தந்துள்ளார். (செய்திமடல் செப்டம்பர் 2011) அதைத்தொடர்ந்து 1978 வரையான நிகழ்ச்சிகளைத் தொகுத்தளிக்க முயற்சிக்கிறேன்.

1962 முதல் திரு. கே.ஆர்.மாரப்பன் பள்ளியையே கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்விடமாகக் கொண்டு இச்சங்கம் இயங்கிவந்தது. புதிய திட்டங்களின்றி மாதாந்திர கூட்டங்களும் இராயப்பேட்டை உட்லண்ட்ஸ் ஓட்டலில் ஆண்டிற்கு 2,3 முறை குடும்பங்களுடன் கூடி மகிழ்ச்சியாக நமது கிராமீய வாழ்வு பற்றி உரையாடுவதுண்டு.

உறுப்பினர்கள் படிப்படியாகக் குறைந்ததால் நண்பர்கள் உற்சாகமிழந்தனர். தோற்றுவிக்கப்பட்டதென்பதை மறந்து சங்கத்தை அச்சமயத்தில் 1968ல் திரு. ஆர்.காந்தி மற்றும் அவரது சகோரர் அமரர் இராஜேந்திரன் இருவரும் பேராசிரியர் முனைவர் கே.கே.லட்சுமணனைச் செயலாளராகத் தேர்ந்தெடுக்க உதவினர். அன்று முதல் திரு.காந்தி தன் சொந்த செலவில் செயலருடன் காலையிலிருந்து மதியம் வரை ஞாயிற்றுக்கிழமை தோறும் ஒவ்வொரு நண்பரையும் சந்தித்து உறுப்பினர்களைச் சேர்க்கப்பாடுபட்டனர். ஒரே மாதத்தில் உறுப்பினர்கள் எண்ணிக்கை 32லிருந்து 137 ஆக உயர்ந்தது. பொருளாளரான அமரர் தேவண்ணனின் அயராத உழைப்பு, கனல் தெறிக்கும் அவரது கட்டுரைகள் ஒவ்வொரு கவுண்டரையும் பொதுப்பணிக்குத் தூண்டியிழுத்தது. தளர்ந்த சில சமயங்களில் உற்சாகமூட்டி ஊக்குவித்த கொங்கு சிங்கம் இன்று நம்மிடையேயில்லையே!

தனக்கென சொந்த இடம், நகருக்குப் புதிதாக வந்து சிறு தொழில் தொடங்குபவர்கட்கு பண உதவி பெற்றுத்தருதல், மேற்படிப்பிற்கு வழி காட்டுதல், வெளிநாடுகளிலுள்ள நம்மவர்களின் உறவை ஏற்படுத்தித்தருதல், உறுப்பினர்களின் முகவரிகளைப் புத்தகமாகத் தொகுத்தளித்தல், சங்கத்திற்கென ஒரு மாத இதழைத்

தோற்றுவித்தல் என்ற கனவுகளுடன் சங்கம் பணியாற்றியது. துடிப்புள்ள இளைஞர்படையும் வழி நடத்திச்செல்ல அனுபவமிக்க பெரியோர்களுமிருந்தனர். முதற்கட்டமாக ஒருகுழு அங்கத்தினர்களை தீவிரமாக சேர்க்க, மற்றொன்று விலாசங்களைத்தொகுக்க புத்தகம் வெளிவந்தது. அதில் ஒவ்வொருவருடைய தொழிலுமிருந்ததால் பலருக்கும் அது ஒரு நல்ல வழிகாட்டியாக இருந்தது. 17 எம்.எல்.ஏ. க்களையும் ஒரு நாள் மாலையில் அமரர் மாரப்பன் பள்ளியில் சந்திக்க வைத்தோம். நமது நண்பர்கள் பல கருத்துகளைத் தெளிவாகவும் ஆழமாகவும் அவர்கள்முன் வைத்தனர். கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு மற்ற இனத்தினரைப்போல நாமும் நமது சமுதாயத்திற்குப் பணியாற்றிடவேண்டுமென்ற கருத்துடன் எம்எல்ஏ க்கள் பேசினர்.

TNPSC ல் ஓர் உறுப்பினர் பதவி காலியாக உள்ளது. அதை நமது சமுதாயத்திற்குக் கேட்கச் சொன்னோம். கட்சி வேறுபாடின்றி எல்லோரும் முதல்வரை அணுகிக்கேட்டதும், 'என்னையா, எல்லோரும் இவ்வளவு ஒற்றுமையாக வந்து கேட்கிறீர்கள். மூன்று பெயர்களைக் கொடுங்கள். நான் ஒருவரைத் தேர்ந்தெடுக்கிறேன்' என்றார் அன்றைய முதல்வர் கலைஞர். இதைத் தொடர்ந்து சங்கம் கொடுத்த மூன்று பெயர்களில் பேராசிரியர் ஏ.பழனிசாமி அவர்கள் TNSPC உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

அவரும் அயராது உழைத்து இனத்திற்கெனப் பணியாற்றினார். ஊர்களில் படித்தும் TNPSC ஓர் எட்டாத கோட்டையென நடுங்கியவர்கள் வெற்றி பெற்றனர். இன்றும் கூட தேர்வில் சிறந்தோருக்கு வாழ்த்துக்கூறுவதோடு இளைஞர்களுக்குப் பயிற்சியளிப்பதுதானே சமுதாயப் பொருளாதாரம் சிறப்பதற்கு உரிய வழி. நன்கு படித்த மாணவர்களுக்கு பல அறநிலையங்கள் மூலமாக உபகாரச் சம்பளம் பெற்றுத்தந்தது இச்சங்கம். இன்று பல தங்குமிடங்கள் தோற்றுவித்து பயில வசதி செய்து தருவது போற்றத்தக்கதே.

இச்சங்கத்தில் சென்னைவாழ் கொங்கு இனத்தவரே சேர்க்கப்பட்டு வந்தனர். எனினும் பணிகள் தமிழகம் பரவியதாக இருந்தது. ஆங்காங்கு திருமண மண்டபங்கள் தோற்றுவிப்பது, ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் நல்லாதரவால் மாணவர்களின் படிப்பை மேம்படுத்துவது போன்ற பணிகள் நடந்துவந்தன.

கரூரில் கொங்கு நண்பர்கள் சங்கச் செயலாளர் கே.கே.லட்சுமணனை முதன் முறையாகச் சந்தித்த பட்டக்காரர் சேனாதிபதிக் கவுண்டர், 'இனி கொங்கு நண்பர்கள் சங்கம் மயிலை வட மாடவீதி என் வீட்டின் மாடியில் இயங்கட்டும்' என்றார்.

தொடரும்..

❖❖❖❖❖

## ஒரு நாளில் நமது உடலில் நிகழும் அதிசயங்கள்!

1. இருதயம் 1,03,680 தடவைகள் துடிக்கின்றது.
2. இரத்தம் 16,80,000 மைல்கள் ஓடுகிறது.
3. சுவாசம் 22,040 தடவைகள் நிகழ்கின்றன.
4. 483 கன அடி காற்றை உட்கொள்கிறோம்.
5. 7,8 இராத்தல் கழிவு ஏற்படுகிறது.
6. 1.43 பைன்ட் வேர்வை வெளிவருகிறது.
7. 3.25 இராத்தல் உணவு சாப்பிடுகிறோம்.
8. 29 இராத்தல் திரவ பதார்த்தம் அருந்துகிறோம்.
9. உறக்கத்தில் 15 முதல் 30 தடவை வரை புரளுகிறோம்.
10. 48,000 வார்த்தைகள் பேசுகிறோம்.
11. 750 பெரிய தசை நார்களை இயக்குகிறோம்.
12. 0.000046 அங்குலம், நகம் வளர்கிறது.
13. 0.01714 அங்குலம், தலை முடி வளர்கிறது.
14. 70,00,000 மூளை அணுக்கள் வேலை செய்கின்றன.

### உடற்கடிகாரம்

| உறுப்புகள் | வேலை நேரம் | செய்ய வேண்டியவை |
|---|---|---|
| நுரையீரல் | அதிகாலை 3–5 | நுரையீரல் பயிற்சி, தியானம் |
| பெருங்குடல் | காலை 5–7 | காலைக்கடன் |
| இரைப்பை | காலை 7–9 | காலைச் சிற்றுண்டி |
| மண்ணீரல் | முற்பகல் 9–11 | குளிர்பானங்கள், ஐஸ்கிரீம் தவிர்க்கவும் |
| இருதயம் | பகல் 11–1 | மதிய உணவும், சிறிது ஓய்வும் (மலை ஏறுதல், குதிரை சவாரி, படியேறுதல் தவிர்க்கவும்) |
| சிறுகுடல் | பிற்பகல் 1–3 | குளிர்பானங்கள், ஐஸ்கிரீம் தவிர்க்கவும் |
| சிறு நீர்ப்பை | மாலை 3–5 | பானங்கள், நீர் பருகும் நேரம் |
| சிறுநீரகம் | மாலை 5–7 | நடக்கும் நேரம், இரத்த ஓட்டத்தை |
| | | சீரமைக்க உதவும் |
| இருதயம் | இரவு 7–9 | இரவு உணவு |
| நாளமில்லா சுரப்பிகள் | இரவு 9–11 | அமைதியாக ஓய்வு |
| பித்தப்பை | நடுஇரவு 11–1 | தூங்கும் நேரம் |
| கல்லீரல் | பின் இரவு 1–3 | அவசியம் தூங்க வேண்டும் |
| | | (தூங்காமல் இருக்கக் கூடாது, உணவு உண்ணுதல் கூடாது) |

❖❖❖❖❖

# மணமகள் தேவை

ஜாதகர் பெயர் : **S.P. பிரபு**

பிறந்த தேதி : 27-05-1986. செவ்வாய் ( அட்சய வைகாசி 12)

பிறந்த நேரம் : 03.50:00 AM (GMT 10:20:00 PM)

பிறந்த ஊர் : திருப்பூர்

ஜன்ம நட்சத்திரம் : பூராடம் பாதம் 4

ஜன்ம ராசி : தனுசு

ஜன்ம லக்னம் : மேஷம்

திதி : (கிருஷ்ண) சதுர்த்தி

தந்தை பெயர் : பன்னீர் செல்வம்.K

தாயார் பெயர் : P.திலகவதி

உடன் பிறப்பு : 1 தங்கை. திருமணமானவர். கரூர்.

கல்வி : MBA

தொழில் : டெக்ஸ்டைல்ஸ் & கார்மெண்ட்ஸ்

உயரம் / நிறம் : 5' .8" / சிவப்பு

குலம் / கோவில் : விளையன் குலம் / கீரனூர் ( காங்கயம்) ஸ்ரீ செல்வ நயாகி அம்மன்

| | | | |
|---|---|---|---|
| | ராகு லக் | சூரி புத | சுக் |
| குரு | ராசி | | |
| | | | |
| சந் செவ் மாந் | சனி | கேது | |

| | | | |
|---|---|---|---|
| | சூரி | புத குரு ராகு | லக் |
| | நவாம்சம் | | மாந் |
| சுக் | | | |
| செவ் | சந் கேது | சனி | |

ஜனன கால தசை இருப்பு : சுக்கிரன் 2 வருடம் 3 மாதம் 21 நாள்

குறிப்பு:

- பெண்ணின் ஜாதகத்தில் ராகு + கேது இருக்க வேண்டும் (செவ்வாய் தோசம் இருக்கக் கூடாது).
- பொருத்தம் வர கூடிய பெண்ணின் நட்சத்திரங்கள்: அசுவனி, ரோகிணி, மிருகசீரிஷம், திருவாதிரை, புனர்பூசம், மகம், உத்திரம், அஸ்தம், சுவாதி, உத்திராடம் 1ம் பாதம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, ரேவதி.

தொடர்புக்கு : 99 44 44 52 01 / 94 88 10 10 10
E-mail: konguculture@gmail.com

# மணமகள் தேவை

| | |
|---|---|
| ஜாதகர் பெயர் | : பி.கோகுலகிருஷ்ணன் |
| பிறந்த தேதி | : 22–09–1981 செவ்வாய் |
| பிறந்த நேரம், இடம் | : 14.19 IST, ஈரோடு |
| நட்சத்திரம் | : புணர் பூசம் (பாதம் 2), ராசி : மிதுனம், லக்கனம் : மகரம் |
| தந்தை பெயர் | : கே.என்.பாலசுப்பிரமணியன் |
| தாயார் பெயர் | : திலகவதி |
| தந்தை தொழில் | : Textile Export Business |
| உடன் பிறப்பு | : 1 அக்கா டாக்டர், ஆஸ்திரேலியா, திருமணமானவர்; மாப்பிள்ளை – டாக்டர் |
| கல்வி | : M.Sc., International Business, London, (UK), MA., (Marketing) (UK) |
| தொழில் | : Own Textile Export Business, Karur |
| வருவாய் | : மாதம் சுமார் Rs. 1,00,000/- |
| உயரம் / நிறம் | : 5.6 அடி, நல்லசிவப்பு |
| குலம் / கோவில் | : பெருங்குடி குலம், புலியூர் ஸ்ரீ முச்சிலியம்மன் |
| சொத்து | : பங்களா, பூமி, வங்கி வைப்பு நிதி – முதலியன ரூ. 10 கோடி |
| எதிர்பார்ப்பு | : நல்ல பாரம்பரியமான குடும்ப பின்னனி, நன்கு படித்த குனவதியான குடும்பப் பாங்கான பெண். |

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| | இராசி | | செ ரா |
| லக் கே | | | |
| | | புத சுக் | சூரி குரு, சனி |

| | | | |
|---|---|---|---|
| சுக் | | சந் | சனி |
| சூரி கே | நவாம்சம் | | குரு |
| லக் | | | ரா |
| செ | | புத | |

தொடர்புக்கு :

தந்தை கே.என்.பாலசுப்பிரமணியன்

செல் : 98430 79736

தாய் : திலகவதி

செல் : 9047034549